**Sub Court, Eraniel**

**O.S. No.64/2023**
Date: 14.03.2025.
வா.சா.2 - திருமதி. ஷோபலதா.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.
1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு சொந்த ஊர் மணவாளக்குறிச்சி. 2007 ம் வருடம் எனக்கு திருமணம் நடந்தது. நானும், எனது கணவர் செல்வின், மாமியார் செல்ல நாடாச்சி மற்றும் மைத்துனர் மணிகண்டன் ஆகியோர் கூட்டுக் குடும்பமாக நுல்லிவிளை வீட்டில் குடியிருந்தோம். மணிகண்டனுக்கு 2011 ல் திருமணம் நடந்தது. அதன் பிறகு தனி வீடுகளில் தாமசம். 2011 ல் எனது மாமியார் எனது கணவருக்கும், மணிகண்டனுக்கும் செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்த பிறகு நாங்கள் தனியாக வீடுகள் கட்டிக் கொண்டோம். மணிகண்டன் சென்னையில் AC மெக்கானிக்காக, எங்கள் திருமணத்திற்கு முன்பே வேலை பார்த்த விபரம் எனக்குத் தெரியும். திருமணம் முடிந்த பிறது மணிகண்டன் அவரது மனைவி நிஷா வை சென்னைக்கு அழைத்துச் சென்று விட்டார். எனது மாமியார் செல்ல நாடாச்சி 100 நாள் வேலை திட்டத்தில் வேலைக்குச் செல்வார். தற்போதும் அவ்வாறு வேலைக்கு போகிறார். எனது மாமியாருக்கு கட்டுமான பணியாளர் நல வாரியத்தில் இருந்து மாதம் ரூ.1000/– பென்சன் தொகை வழங்கப்படுகிறது என்றால், சரிதான். அவருக்கு இந்தியன் பேங்க் மற்றும் இந்தியன் ஓவர் சீஸ் வங்கியில் சேமிப்புக் கணக்கு உள்ளது. எனது மாமியாருக்கு வட்டிக்கு பணம் கொடுக்கும் வழக்கம் உள்ளது என்றால், சரிதான். எனக்கு எழுதப் படிக்கத் தெரியும். இன்று நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்வதற்கு என்னுடன் எனது மாமியார் வந்திருக்கிறார். இதற்கு முந்தைய தேதியிலும் எனது மாமியார் என்னுடன் வந்தார் என்றால், சரிதான். இந்த வழக்கின் விபரங்கள் எனக்குத் தெரியும். எனது மாமியார், எனது கொளுந்தனாரின் மனைவிக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார். வழக்கில் என்ன பரிகாரம் கேட்டிருக்கிறார் என்ற விபரம் எனக்குத் தெரியாது. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நான் தான் கூறினேன். மணிகண்டன் 2020 ல் இறப்பது வரையில் நிஷாவிற்கும், எனது மாமியார் மற்றும் எனக்கும் சுமூகமான உறவு இருந்தது. மணிகண்டனுக்கு எந்த வருடம் உடல்நிலை சரியில்லாமல் போனது என்ற விபரம் எனக்குத் தெரியாது. மணிகண்டனுக்கு நிஷா சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை கொடுத்த விபரம் எனக்குத் தெரியாது. மணிகண்டன் இறப்பதற்கு

3 வருடங்களுக்கு முன்பு அவருக்கு உடல்நிலை சரியில்லை என்ற விபரம் எனக்குத் தெரியும். 2014 முதல் 2020 வரை மணிகண்டனை அவருடைய மனைவி நிஷா நல்ல முறையில் பராமரித்த விபரம் எனக்குத் தெரியும். நிஷாவின் மகள் ஹர்ஷாவை நான் பார்த்தது கிடையாது. 2ம் பிரதிவாதியை பற்றி எனக்கு நேரடியாக விபரங்கள் தெரியாது. உறவினர்கள் சொல்லித் தான் கேள்விபட்டேன். ஹர்ஷா அவருடைய தாயார் நிஷாவின் பராமரிப்பில் தான் இருக்கிறார் என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 விடுதலைப் பத்திரத்தில் உள்ள கையெழுத்து எனது மாமியாருடையது. அதில் சாட்சியாக நான் கையெழுத்து செய்திருக்கிறேன். அதில் 2வது சாட்சியாக ராம்குமார் நான் கையெழுத்து செய்த பிறகு, தனியாக கையெழுத்து செய்தார். எனக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் படிக்கத் தெரியும். பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு காலை சுமார் 10.30 மணிக்குச் சென்றோம். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5ல், பத்திரத்தை பதிவு செய்ய தாக்கல் செய்தது எனது மாமியார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த பக்கத்திலும் நான் சாட்சியாக கையெழுத்து செய்திருக்கிறேன் என்றால், சரிதான். 15.07.2020ல் இந்த பத்திரத்தை எனது மாமியாரிடம் யாரும் கொடுக்கவில்லை. நான் உண்மைக்கு மாறாக, அன்று நடந்த விபரங்களை மறைத்து எனது மாமியாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.5 உள்ள பத்திரங்கள் வாதி செல்லநாடாச்சியின் பெயரில், 14.07.2020ல் வாங்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். இந்த பத்திரத்தை வாங்கி அதனை 15.07.2020 அன்று காலை 11.49 மணிக்கு பத்திரப் பதிவிற்கு செல்ல நாடாச்சி தாக்கல் செய்திருக்கிறார் என்றால், சரியல்ல. அதற்காக கட்டணம் ரூ.6,350/- செல்ல நாடாச்சி செலுத்தியிருக்கிறார் என்றால், சரியல்ல. இந்த விடுதலைப் பத்திரத்தை நானும், எனது மாமியாரும் படித்துப் பார்த்து, அதன் விபரங்களைத் தெரிந்து கொண்டு மனப்பூர்வமாகத் தான் அதில் கையெழுத்து செய்தோம் என்றால், சரியல்ல. எனது மாமியார் காவல் துறையில் மற்றும் கலெக்டர் ஆபீசிலும் மனு கொடுத்த விபரங்கள் எனக்குத் தெரியாது. அந்த மனுக்கள் அனைத்தையும் எனது மாமியார் 2022 ஆகஸ்ட் மாதத்திற்கு பிறகு தான் கொடுத்தார் என்றால், சரிதான். அந்த விசாரணைக்கு S.P. Office, Collector Office கு நானும் சென்றேன். அவ்வாறு சென்ற தேதிகள் நினைவில் இல்லை. அந்த விசாரணையில் எனது மாமியாரிடம் என்ன விசாரித்தார்கள் என்றால், நான் போன அன்று எஸ்.பி. அங்கு இல்லை. எனக்கு பிரதம மந்திரி விவசாய திட்டத்தில் ரூ.6,000/- எனக்கு ஒரு வருடம் வந்தது. அதனை பெறுவதற்கு என்ன

வழிமுறை என்ற விபரம் என்று எனக்குத் தெரியும். வில்லேஸ் ஆபீசிற்கு சென்று கர ரசீதுகள் கொடுத்து அதற்கு Apply செய்தேன். எனது கணவருக்கு அவ்வாறு Apply செய்தேன். இந்த விபரம் எனக்கு தெரிந்திருந்தும், எனது மாமியாருக்கும் இதே வழிமுறையை கடைபிடித்தால் போதும் என்ற விபரத்தை நான் விளக்கிச் சொல்லாததற்கு, பிரத்யேகமான காரணங்கள் ஒன்றும் இல்லை. இந்த நிலையில் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் பிரதம மந்திரி விவசாயத் திட்டத்தில் பணம் பெறுவதற்கு பத்திரம் போடப்பட்டது என்பதை நிஷாவிற்கு எதிராக நான் தெரிவித்திருக்கும் விவரங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றால், சரியல்ல. நான் முதல் விசாரணையில் குறிப்பிடும் ஜீலை 14 – 2020 என்பது எனது கொளுந்தனார் மணிகண்டன் இறந்து 2 மாதங்கள் ஆகும். எங்களது சமுதாயத்தில் பொதுவாக கணவர் இறந்து ஒரு வருடத்திற்கு பெண்கள் வீட்டை விட்டு வெளியே செல்ல மாட்டார்கள் என்றால், அது பழைய காலம். அவ்வாறு நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், அவ்வாறு ஒரு வருடம் வரை மனைவி, கணவர் வீட்டில் இருப்பார் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.5 பத்திரம் பதியும் போது நிஷா நுல்லிவிளையில் அவர் கணவர் வீட்டில் தான் இருந்தார் என்றால், சரிதான். எனவே தற்போது என்னிடம் காட்டப்படும் முதல் விசாரணையின் 2ம் பக்கத்தில், கடைசி பத்தியில் குறிப்பிட்டிருக்கும் விபரங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றால், சரியல்ல. எனது கணவருக்கு ஆன்லைனில் பிரதம மந்திரி விவசாயத் திட்டத்திற்கு Apply செய்த போது நான் ஆங்கிலத்தில் கையெழுத்து செய்தேனா என்றால், நானோ, எனது கணவரோ அதில் கையெழுத்து செய்யவில்லை. அவ்வாறு நாங்கள் இருவரும் கையெழுத்து செய்யாத நிலையில் நான், ரூ.6000/- பெறுவதற்கு எதற்காக ஆங்கிலத்தில் கையெழுத்து செய்ய வேண்டும் என்று நிஷாவை நாங்கள் கேட்கவில்லை. நிஷா என்னிடமோ, எனது மாமியாரிடமோ ஆங்கிலத்தில் கையெழுத்து போட வேண்டும் என்று சொல்லவில்லை என்றால், சரியல்ல. நானும், எனது மாமியாரும் நாங்களாகத் தான் ஆங்கிலத்தில் வா.சா.ஆ.5 ல் கையெழுத்து செய்தோம் என்றால், சரியல்ல. நிஷா எதுவரை படித்திருக்கிறார் என்ற விபரம் எனக்குத் தெரியாது. நிஷா மணிகண்டனுடன் திருமணமாவதற்கு முன்பே சசி என்பவரை காதலித்து, மணிகண்டன் இறந்த பிறகு அவருடன் குடும்பம் நடத்தும் விபரம் எனக்கு உறவினர்கள் சொன்னார்கள். அவ்வாறு சொன்னது யார் என்றால், சாட்சி பதில் ஏதும் கூறவில்லை. நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டிருப்பது போல நிஷாவிற்கும், சசி என்பவருக்கும் உறவு எதுவும் இல்லை

என்றாலும், மணிகண்டன் இறந்த பிறகு நிஷாவின் பெற்றோர் அவருக்கு திருமணம் செய்து வைத்திருக்கிறார்கள் என்றால், சாட்சி உறவினர்கள் கூறினார்கள் என்கிறார். எனது மாமியாரின் பணவரவு மற்றும் செலவு கணக்குகள் பற்றி எனக்குத் தெரியாது என்றால், சரிதான். நிஷாவிடமிருந்து ரூ.6,00,000/- மற்றும் பத்திரப் பதிவிற்கு என்று ரூ.1,00,000/- வாங்கிக் கொண்டு தான் எனது மாமியார் வா.சா.ஆ.5 ஆவணத்தை பதிவு செய்து கொடுத்தார் என்றால், சரியல்ல. 2ம் பிரதிவாதி ஹர்ஷா வில்லுக்குறிக்கு அருகே உள்ள குளுமைக்காட்டில் 6ம் வகுப்பு படிக்கிறார் என்றாலும், அவர் தாயாருடன் தான் தாமசிக்கிறார் என்றால், அது விபரம் எனக்குத் தெரியாது. 2022ல் திருமணம் நடக்கும் வரையில், நிஷா, அவருடைய மாமியார் வீட்டிற்கு வருவது வழக்கம் என்றால், சரிதான். வா.சா.ஆ.5 பத்திரத்தின் விபரங்கள் அனைத்தையும் தெரிந்து கொண்டு தான் நானும், எனது மாமியாரும், அதில் கையெழுத்து செய்தோம் என்றாலும், தற்போது நான் இவ்வழக்கிற்காக நான் உண்மை விபரங்களை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.